05.11.2024
அசல் வழக்கு எண்: 299/2014

பி.வா.சா.1 சாட்சி குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தற்போது 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேனா என்றால் ஆமாம். எந்த ஆண்டு வரை பணி நீட்டிப்பு செய்துள்ளார்கள் என்றால் 2020ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணி புரிந்து வருகிறேன். தாவா பிளாட்டுகளுக்கான வரைபடம் உள்ளதா என்றால் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். மேற்படி வரைபடம் எந்த ஆண்டு தயார் செய்யப்பட்டது என்றால் எந்த ஆண்டு என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2008ம் ஆண்டிற்கு முன்பாக தயார் செய்யப்பட்டது. மேற்படி வரைபடம் எத்தனை பிளாட்டுகளுக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 100 பிளாட்டுகளுக்கு மேல் இருக்கும். சரியாக தெரியாது. 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் மொத்தம் எத்தனை பிளாட்டுகள் போடப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

மலையரசன் என்பவர் எங்கள் நிறுவனத்தில் என்ன பொறுப்பில் இருந்தார் என்றால் பெர்சனல் அட்மினிஸ்ட்ரேசனில் பொது மேலாளராக இருந்தார். 10.08.2011ம் தேதி வாதிக்கு என்ன கடிதம் அனுப்பினோம் என்றால் நிறுவனத்தில் வேலை செய்த முன்னாள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டிற்கு பின்னால் இருந்த 10 அடி இடத்திற்கு பணம் கட்டி இருந்தார்கள். அதனால் மேற்படி 10 அடி காலி இடத்தை பதிவு செய்து கொடுக்கசொல்லி அனைவரும் கேட்டார்கள். அதனால் வழக்கு நிலுவையில் இருப்பதால் பத்திரம் பதிவு செய்து கொடுக்க முடியாது என்றும், வேண்டும்

என்றால் பணத்தை திருப்பி பெற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டு கடிதம் அனுப்பினோம். எத்தனை நபர்களிடம் வீட்டிற்கு பின்னால் இருந்த இடத்திற்கு பணம் வாங்கி இருந்தோம் என்றால் சுமார் 25 நபர்களிடம் இருந்து பணம் வாங்கினோம். மேற்படி இடத்திற்கு ஒவ்வொரு நபரிடமும் எவ்வளவு பணம் வாங்கி இருந்தோம் என்றால் ச.அடிக்கு 45 ரூபாய் வாங்கி இருந்தோம்.

மேற்படி இடம் சம்பந்தமாக யார் யார்மீது வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் காலனியில் குடியிருக்க கூடிய நபர்கள் தனித்தனியாக நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள். எந்த ஆண்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் 2008 மற்றும் 2009ம் ஆண்டு தாக்கல் செய்தார்கள். எந்த ஆண்டு வழக்கு முடிவு பெற்றது என்றால் ஒருசில வழக்குகள் 2009ம் ஆண்டும், ஒரு வழக்கு 2023ம் ஆண்டும் முடிவடைந்தது.

16.05.2012 ம் தேதியிட்ட பி.வா.சா.ஆ. 5 கடிதத்தை எதற்காக அனுப்பினோம் என்றால் வாதியின் வீட்டிற்கு பின்னாள் உள்ள இடத்திற்கு அவர் பணம் செலுத்தவில்லை. ஆனால் தவறுதலாக அவருக்கு கடிதம் அனுப்பிவிட்டோம். அதனால் நாங்கள் அனுப்பிய 10.08.2011ம் தேதியிட்ட கடிதத்திற்கு மறுப்பு தெரிவித்து மேற்படி பி.வா.சா.ஆ. 5 கடிதத்தை அனுப்பினோம். வாதியை தவிர்த்து வேறு யாருக்காவது மறுப்பு கடிதம் அனுப்பியுள்ளோமா என்றால் இல்லை. மற்றவர்களுக்கு வழக்கு முடிவடைந்த பிறகு பதிந்து கொடுத்தோமா என்றால் தற்போது வரை யாருக்கும் பதிவு செய்து கொடுக்கவில்லை.

3ம் பிரதிவாதிக்கு எந்த ஆண்டு எத்தனை பிளாட்டுகள் பதிந்து கொடுத்தோம் என்றால் 2009ம் ஆண்டு ஆவண எண். 2034 என்ற ஆவணத்தின் படி பல பிளாட்டுகளை பதிந்து கொடுத்துள்ளோம். சரியாக

ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தின் மூலம் எத்தனை பிளாட்டுகள் பதிந்து கொடுத்தோம் என்று தெரியுமா என்றால் பல்வேறு சர்வே எண்களில் பதிந்து கொடுத்தோம். அதனால் ஞாபகம் இல்லை. 3ம் பிரதிவாதிக்கு மேற்படி ஆவணத்தின் படி 2009ம் ஆண்டு பதிந்து கொடுப்பதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்றோமா என்றால் WP(MD)No. 6182/2008 என்ற வழக்கில் எங்களுடைய சொத்தை கிரையம் செய்து கொடுக்கலாம் என்று உத்தரவிடப்பட்டு மேற்படி உத்தரவு 2009ம் ஆண்டு எங்களுக்கு கிடைக்கபெற்றது. அதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம். மேற்படி விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி உத்தரவை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 8 ஆவணம்தான் மேற்படி உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவான பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உரிய சிவில் நீதிமன்றம் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி உத்தரவில் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்தை பொறுத்து விற்பனை செய்வதற்கு நிறுவனத்திற்கு உரிமையுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் படி சிவில் நீதிமன்றத்தை அனுகினோமா என்றால் அனுகவில்லை. 10.08.2011ம் தேதி கடிதம் அனுப்பப்பட்ட 25 நபர்களில் 3ம் பிரதிவாதியும் ஒரு நபரா என்றால் இல்லை. மேற்படி கடிதம் அனுப்புவதற்கு முன்பாகவே 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டோம். எந்த தேதியில் விற்பனை செய்தோம் என்றால் 19.06.2009ம் தேதி விற்பனை செய்தோம்.

3ம் பிரதிவாதிக்கு யாருடைய பெயரில் கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் பொது மேலாளர் மூலமாக கிரையம் கொடுத்தோம். தாவா சொத்து அமைந்துள்ள தியாகராஜன் மில் காலனி இடமானது தியாகராஜன் மில்லில் வேலை செய்த தொழிலாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காலனியில் உள்ள வீடுகள் அனைத்தும் தொழிலாளர்களுக்கு மட்டுமே கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியோ, அவரது தகப்பனாரோ மீனாட்சி மில்லில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். ஆனால் அவருக்கு வீடு கிரையம் செய்து கொடுக்கவில்லை. தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலனியில் உள்ள இடத்தை தனி நபரான 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் மேற்படி காலனியில் வீடுகள் மட்டுமே தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. வீடுகள் போக காலி இடங்கள் உள்ளன. அந்த காலி இடங்களைத்தான் மற்ற நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளோம். 25 நபர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு பின்னாலும் காலி இடங்கள் உள்ளது என்றால் மேற்படி வீட்டிற்கு பின்னால் உள்ள இடங்கள் போக மேலும் காலி இடங்கள் உள்ளன. அந்த காலி இடங்களைத்தான் தனி நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளோம். மேற்படி 25 நபர்களும் மில் தொழிலாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தார்கள் என்றால் சரிதான்.

நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருக்கும் போது 3ம் பிரதிவாதிக்கு சில பிளாட்டுகளை கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரம் பதிவு சம்பந்தமாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் சொத்துக்களை நான்

தன்னிச்சையாக தனி நபர்களுக்கு ஆதாயம் அடையவேண்டும் என்ற நோக்கத்தில் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதியிடம் பணத்தை பெற்றுக்கொண்டு பணம் வாங்கவில்லை என்று பொய்யாக கடிதம் அனுப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதியிடம் பணத்தை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க மறுத்ததால் கிரையம் செய்து கொடுக்க கேட்டு வழக்கு பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி செலுத்திய பணத்திற்கு ஆவண எண்.3242/2011 என்ற ஆவணத்தின் படி வீடு எண். 90 பதிவு செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி வீடு யாருக்கு எந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது என்றால் வாதியின் தகப்பனாருக்கு 1987ம் ஆண்டு ஒதுக்கப்பட்டது. வாதியின் தகப்பனார் எவ்வளவு பணம் செலுத்தி இருந்தார் என்றால் 29.08.1988 ம் தேதி ரூ.20,732/– எங்கள் வங்கி கணக்கில் செலுத்தினார். வீட்டிற்கான மொத்த தொகை எவ்வளவு என்றால் ரூ.27,000/– ஆகும். விதிமுறைக்கு மாராக 3ம் பிரதிவாதிக்கு நாங்கள் எழுதிகொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றாலும் அதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணமும் செல்லதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

(2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)